பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு
The EELANADU

மலர் 19 மார்கழி 11 முஹறம் 14 இதழ் 316
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 26-12-77

SUNSHINE SOAP
இது ஓர் லாலா தயாரிப்பு
சன்சயின் சோப்
லாலா சோப்
தொழிற்சாலை
அச்சுவேலி

## சார்லி சாப்ளின் காலமானர்

லண்டன், டிச 25-

உலகப்புகழ்பெற்ற திரைப்பட நகைச்சுவை நடிகர் சார்லி சாப்ளின் இன்று தமது 88வது வயதில் ஜெனிவாவில் காலமானர்.

சலனப்பட ஆரம்பகால முதல் இவர் படங்களில் நடித்துவந்துள்ளார். மௌனப் படங்களில் முதலில் நடிக்க ஆரம்பித்த இவர், பின்னர் சிறந்த படங்களை தயாரித்தும் நடித்தும் புகழ்பெற்ருர்.

[6-ம் பக்கம் பார்க்க]

# வீடுவாங்க கடன் அரசு வழங்கும்

## அடுத்த ஆண்டுமுதல் திட்டம் அமுலாகும்

(கொழும்பு)

வீடுகளை விலைக்கு வாங்குவதற்கு பொது மக்கள் கடன் பெற்றுக் கொள்ள முடியும்.

இதற்கான திட்டம் ஒன்றை அரசு அடுத்த ஆண்டு முதல் அமுலுக்கு கொண்டுவர விருக்கின்றது.

கட்டப்பட்ட வீடுகளை சொந்தமாக விலைக்கு வாங்கிக் கொள்ள விரும்புகிறவர்கள் 40 ஆயிரம் ரூபாய் வரையில் கடனைப் பெறமுடியும். வீடமைப்பு அமைச்சு இதற்கான ஏற்பாட்டைச் செய்துள்ளது.

வீடு கட்டுவோருக்கு வசதிகள் செய்துகொடுக்கவும் அரசு திட்டமிட்டிருக்கின்றது. பொதுமக்கள் காணிகளை வாங்கவும், கடன்வசதிசெய்து கொடுக்கவும் தீர்மானிக்கப் பட்டுள்ளது. வீடு கட்டுவோருக்கு கட்டுமானப் பொருட்கள் தாராளமாகவும் வசதியாகவும் கிடைப்பதற்கும் ஏற்பாடுசெய்யப்படவிருக்கின்றது.

# எகிப்தில் பெகின்; குதூகல வரவேற்பு

இஸ்மாலியா (எகிப்து) டிச 25

எகிப்திய நகரமான இஸ்மாயிலியாவில் இன்று இஸ்ரேலியப் பிரதமமந்திரி திரு பெகின் வந்து சேர்ந்தபோது அவருக்குக் குதூகல வரவேற்பு அளிக்கப்பட்டது.

மத்தியகிழக்கில் அமைதியைத் தோற்றுவிக்கும் முயற்சியின் ஒரு அம்சமாக கிறிஸ்மஸ் பண்டிகை தினமான இன்று எகிப்திய அதிபர் சதாத்தும் இஸ்ரேலிய பிரதமர் பெகினும் தமது பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தார்கள்.

அண்மையில் அதிபர் சதாத் இஸ்ரேலுக்கு விஜயம்செய்ததற்குப் பதிலாக திரு. பெகின் எகிப்துக்கு தமது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பயணத்தை மேற்கொண்டார்.

இஸ்மாலியாவுக்கு சுமார் 9 மைல் தூரத்திலுள்ள விமானநிலையத்தில் திரு. பெகின் வந்திறங்கிய போது அவரை எகிப்தியஉதவி

[2-ம் பக்கம் பார்க்க]

### சதாத் - பெகின் உடன்பாடு

இஸ்மாலியா (எகிப்து) டிச 26

அதிபர் சதாத்தும் — பிரதமர் பெகினும் நடத்திய பேச்சுக்களில் முதற் கட்டமாக இரு நாடுகளையும் கொண்ட ராணுவக் கூட்டுக் குழுக்களை அமைக்க உடன்பட்டுள்ளனர்.

இக்குழுக்களில் இரு நாடுகளின் பாதுகாப்பு— வெளிநாட்டு அமைச்சர்கள் அங்கம் வகிப்பர்.

திரு. பெகின் தமது பயணத்தை நாளை வரை நீடித்துள்ளார்.

## ஈழத்துச்சிதம்பரத் தீர்த்தம்

[யாழ்ப்பாணம்]

வரலாற்றுப் புகழ் மிக்க ஈழத்துச்சிதம்பரத் தீர்த்தோற்சவம் இன்ருகும். இன்று காலை முதல் மாலை வரை காவடிகள் இடம்பெறும். விசேஷமாக வீமன்காமத்திலிருந்து பறவைக் காவடி ஒன்றும் வரவுள்ளது.

சுவாமி பிற்பகல் 5-00 மணிக்குத் தீர்த்தமாடுவார். [கெ]

## சிறுமியின் கண் தானம்

[கொழும்பு]

13 வயதுச் சிறுமி, தமது இரண்டு கண்களையும் கண் இல்லாதவர்களுக்குப் பொருத்துவதற்காகத் தானம் செய்துள்ளார்.

நத்தார் தினமான நேற்றுக் காலை கொழும்பு பெரியாஸ்பத்திரியில் காலமான நுகேகொடையைச் சேர்ந்த நீலாந்தி வீரதுங்க என்ற இச்சிறுமி காலமாவதற்கு முன்பே தமது கண்களை உலகக் கண் தானசபைக்குத் தானமாகக் கொடுக்குப்படி கேட்டிருந்தாள். அவர் கோரிக்கை நிறைவேற்றப்பட்டது.

தொல்புரம் ஆசிரியர் கொலை:

## மூவருக்கும் தலா ரூ. 2000 பிணை

[மாவிட்டபுரம்]

தொல்புரம் ஆசிரியர் கொலைச் சந்தேக நபர்களில் மூவர் தலா 2000 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

தொல்புரத்தைச்சேர்ந்தசம் பிப்பிள்ளை நடராசா என்னும் ஆசிரியர் கும்பிடக், குப்பிடக் கத்தியால் வெட்டிக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக சங்கானைப் பொலிசாரால் கைது செய்யப்பட்ட தொல்புரத்தைச் சேர்ந்த ஆர். ஸ்ரீதரன், எஸ். மகாலிங்கம், கே. மகேந்திரன், கே. மகாதேவன், எஸ். நாகராசா ஆகிய சந்தேக நபர்கள் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்கள் மீண்டும் மல்லாகம் நீதிபதி முன் ஆஜர் செய்யப்பட்ட சமயம் 1-ம், 2-ம், 3-ம் சந்தேக நபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் ஆர். ஈ. தம்பிரத்தினம், திரு. சபாநாதன் ஆகியோர் இம் மூவரையும் பிணையில் விடுமாறு விண்ணப்பித்தபோது 1-ம சந்தேக நபரை மட்டும் 2000 ரூபா பிணையில் செல்ல அனுமதித்து ஏனைய இருவரையும் தொடர்ந்து றிமாண்டில் வைக்கும்படி நீதிபதி உத்தரவிட்டார்

[2ம் பக்கம் பார்க்க]

சன்சோனி கமிஷன் முன்

## பாதிக்கப்பட்டயாவரும் சாட்சியமளிக்கவேண்டும்

### யாழ். எம். பி. கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

கடந்த காலங்களில் நாட்டில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களைப் பற்றி விசாரணை நடத்தவிருக்கும் சன்சோனிக் கமிஷன் முன் பாதிக்கப்பட்ட சகல தமிழரையும் சாட்சியமளிக்குமாறு யாழ்ப்பாண எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

இனக் கலவரம் பற்றிய பூரணமான விசாரணையில் ஈடுபடும் சன்சோனிக் கமிஷனுக்கு கலவரத்தினல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நஷ்ட ஈடு வழங்குவதற்குச் சிபாரிசுசெய்யும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

எனவே பாதிக்கப்பட்ட சகல தமிழ் மக்களும் தை மாதம் 2ந் திகதிக்கு முன்னர் திரு. கே. சி. நித்தியானந்தா செயலாளர், இனக் கலவர விசாரணை விபரம் திரட்டும் குழு, அரசாங்க எழுதுவினைஞர் சங்கப் பணிமனை, காலி வீதி, கொழும்பு-3 என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளும்படியும் திரு. யோகேஸ்வரன் கேட்டுக் கொண்டுள்ளார். [கா]

லொறி மோதி

## ஒருவர் ஸ்தலத்தில் பலி பெண் படுகாயம்

[சுழிபுரம்]

வழக்கம்பரையில் நடைபெற்ற லொறிவிபத்து ஒன்றில் கே. கனகசுந்தரம் (வயது 44) என்பவர் ஸ்தலத்திலேயே மரணமடைந்தார்.

படுகாயமடைந்த கே. அன்னம்மா என்ற பெண் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குழை ஏற்றிவந்த லொறி ஒன்றே இவர்களை மோதியதாகத் தெரிவிக்கப்பட்டது.

சங்கானை பொலிசார் விசாரணை நடத்துகின்றனர். (உ)

# பாறைகளுக்கிடையில் கான்ஸ்டபிளின் சடலம்

## சந்தேகநபர்கள் இன்னும் கைதாகவில்லை

(நெல்லியடி)

கொலையுண்ட பருத்தித்துறை பொலிஸ்நிலையத்தைச் சேர்ந்த கான்ஸ்டபிளின் சடலம் நேற்று பருத்தித்துறை கடலில், கரையை அண்மிய பகுதியிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டது.

கடலில் பாறைகளுக்கிடையில் சடலம் கிடந்ததாகவும், அது கிடந்த பகுதியில் காகங்கள் பறப்பதைக்கண்ட போது மக்கள் பொலிசாருக்கு அறிவித்ததாகவும் தெரிகின்றது.

இச் சடலம் பின்னர் மந்திகை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு பிரேதபரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை, பொலிஸ் புகைப்பட நிபுணர்கள், சம்பவம் நடைபெற்றதாகக் கருதப்படும் இடத்தைப் புகைப்படம் எடுத்தார்கள். அத்துடன் பருத்தித்துறை பொலிஸ் பொறுப்பதிகாரி எம். சேனநாயக்கா தலைமையில் பொலிஸார் பருத்தித்துறைத் துறைமுகப் பாலத்திலிருந்து தபாற்கந்தோர் ருேட் ஊடாக ஒடக்கரை ஒழுங்கைப் பகுதிகளை அளந்து குறிப்பெடுத்தார்கள்.

இரு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் துப்பாக்கிகள் சகிதம் துறைமுகத்தைக் காவல்புரிந்து வருகின்றனர். பொலிஸ் உயர் அதிகாரிகளும் சம்பவம் நடைபெற்ற இடங்களைப் பார்வையிட்டனர். பார்வையிட்ட பொலிஸ் அதிகாரிகள், ச. தொ. ச. முன்பாகவுள்ள இடத்திலிருந்து இரு கற்களை எடுத்துச் சென்ருர்கள். இக் கான்ஸ்டபிள் மரணம் தொடர்பாகப் பருத்தித்துறையில் எவ்வித அசம்பாவிதமும் நடைபெருத வண்ணம் யாழ்ப்பாணப் பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. ரண்முத்துகல இங்கு விஜயஞ்செய்து நடவடிக்கைகள்

[6ம் பக்கம் பார்க்க]

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

அக்கோடியன், மெலோடிக்கன், அம்பிலிபயர் (Technic), எலலாச்சர் ஆகியன. தொடர்பு கொள்க: 159/A, ரெமபிள் ரோட். நல்லூர். 8003


## நவரச நாடகம்

[யாழ்ப்பாணம்]

குருநகர் வலைத் தொழிற்சாலை ஊழியர்களின் கலைக் கழக தயாரிப்பான "காவியத் தலைவி" என்ற நவரச நாடகம் ஒளிவிழாவில் மேடையேற்றப்பட்டது. [செ]


## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க



### பிறந்த தின வாழ்த்து

இன்பரூபி (றூபா)



பூநகரி நல்லூரைச் சேர்ந்த இரத்தினம் தம்பதிகளின் அன்புப்புதல்வி இன்பரூபி இரண்டாவது பிறந்த நாளை 26-12-77 திங்கட்கிழமை கொண்டாடுகின்றார். இவரை அப்பா அம்மா அல்லாரையைச் சேர்ந்த அம்மம்மா ஐயா பிறைகுடிப் பெரியப்பா பெரியம்மா சித்திமார் மாமமார் மச்சாள்மார் அத்தை சித்தப்பா பாட்டா பாட்டி வல்லிபுரம் தம்பதிகள் ஆசிரியர் கந்தையா தம்பதிகள் ஆகியோர், சிறந்த சிறப்புடனும் பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர். 8014



வெளிவந்துவிட்டது

# பாலபோதினி

அரிவரிப் புத்தகம்

## வண்ணச்சித்திரப் பதிப்பு

பெற்றுக்கொள்ளும் இடம்:

## சுன்னாகம் தனலக்குமி புத்தகசாலை.



## நவா தொழில் கலைக்கூடம்

கீழ்க்காணும் பயிற்சி வகுப்புகள் 1978-ம் ஆண்டு தைமாதம் ஆரம்பிக்கப்படும். சேர விரும்புவோர்கள் (ஆண்-பெண்) பயிற்சி பெறவிரும்பும் தொழிலின் பெயரையும் சேர்வுப்பணம் ரூபா 10/ காசுக்கட்டளை மூலம் 10-1-78 முன் அனுப்பி வைக்கவும்.

1. கடைச்சல்
2. ஓட்டுவேலை
3. மரவேலை
4. கட்டிடவேலை
5. இரும்புவேலை
6. மோட்டார் யந்திரவேலை
7. மேல்நாட்டு சமையல் வேலை
8. எல்லாவித வாகனங்களும் ஓட்டம் பயிற்சி செய்தல்
9. தாதிகள் பயிற்சி

எங்கள் நிலையத்தின் சான்றிதழ் மத்திய கிழக்கு நாடுகளில் வேலைவாய்ப்புக்கு அங்கீகரிக்கப்படும்.

பதிவாளர்,
தபால் பெட்டி 82,
யாழ்ப்பாணம்.

7996



யாழ். மாவட்ட புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்க

## விலைக்கூறு-5000, பரமாஸ் வேட்டி

| | | |
|---|---|---|
| நூல் இலக்கம் | — | 50 எஸ் × 50 எஸ். |
| செறிவு | — | 52 × 58. |
| நீளம் | — | 4 யார். |
| அகலம் | — | 48". |

விண்ணப்பிப்போர் — மீட்டு எடுக்கக்கூடிய முற்பணமாக ரூபா 100/- செலுத்தப்படவேண்டும். பகுதிகளாகத் தேவைப்படுவோரும் விண்ணப்பிக்கலாம்.

### 2-1-78-ந் திகதி பிற்பகல் 2-00 மணிக்கு

முன்னதாக "தலைவர், யாழ் மாவட்ட புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், 10/1, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்" என்ற விலாசத்திற்கு அரக்குமுத்திரை பொறித்து நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமோ கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும். விலைக்கூறுகளை ஏற்றுக்கொள்ளவோ, நிராகரிக்கவோ சங்கத்திற்கு உரிமை உண்டு. கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "விலைக்கூறு பரமாஸ் வேட்டி" என எழுதப்படல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்.

8009


[யாழ்ப்பாணம்]

"இலங்கையின் விளையாட்டுத்துறை அமைச்சு இலங்கையடங்கிலும் 32 விளையாட்டு மாவட்டங்களாக்கி யாழ்ப்பாணத்தையும் ஒரு மாவட்டமாகப் பிரித்தும், இதுவரை யாழ். மாவட்ட உதைபந்தாட்டக் சமூகத்திற்கு ஒரு சதமேனும் அபிவிருத்திக்காக வழங்கவில்லை."

யாழ். உதைபந்தாட்டச் சங்க செயலாளர் திரு ஈ. கே. குமரையா. யாழ் லயன்ஸ் கழக பத்திரிகையாளர் மாநாட்டில் இத்தகவலைத் தெரிவித்தார்.

யாழ் வாடிவீடு வரவேற்புக் கூடத்தில் இம்மாநாடு நடைபெற்றது. திரு குமரையா

## "விளையாட்டுத்துறை அமைச்சு

# யாழ். மாவட்டத்திற்கு ஒருசதமும் வழங்கவில்லை"

தொடர்ந்துபேசுகையில் கூறியதாவது:

யாழ்ப்பாண மக்கள் தமது கலாசாரத்திற்கு ஒவ்வாத தென உதைபந்தாட்டத்தைக் கருதுவது வேதனைக்குரியது. உதைபந்தாட்டம் சிறந்த விளையாட்டுக்களில் ஒன்று. அதை ஒவ்வொருவரும் பேணி, அகில உலகில் எமது வீரர்கள் எத்துறையிலும் சளைத்தவர்களல்ல என்பதை நிலைநாட்ட யாழ். லயன்ஸ் சமூகம் போன்ற சமூக சேவைக் கழகங்கள் முன் வருவது யாழ் மாவட்டத்தில் உதைபந்தாட்டத் துறைக்கு பெரும் அதிர்ஷ்டமாகும்.

நாம் யாழ்ப்பாண விளையாட்டரங்கை யாழ். மாநகரசபையிடம் கையளிக்காமல் எம்மிடமே ஒப்படைக்குமாறு கோரினோம். ஒரு சிலரும் இக்கோரிக்கையை வலியுறுத்தினார்கள். பெரும்பான்மையினர் இக்கோரிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்தமையினால் இன்று எமது தேவைக்கு ஒவ்வாத நிலையில் அரசியல் புகுத்தப்பட்டு இருப்பதைக் கண்டு வேதனையடையவேண்டியுள்ளது.

யாழ். லயன்ஸ் கழக பிரசாரக பொருளாளர் திரு எஸ் செபஸ்தியாம்பிள்ளை பேசுகையில் கூறியதாவது:

"எதிர்வரும் ஜனவரி மாதத்தில் 12, 13, 14, 15-ந் திகதிகளில் நடாத்தவிருக்கும் யாழ். லயன்ஸ் உதைபந்தாட்டப் போட்டி எமது சகோதரர்களுக்கு நல்வாழ்வளிக்கும் சமூகப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படவுள்ளது. கைதடி அநாதை இல்லம், திருநெல்வேலி முத்துத்தம்பி அநாதை இல்லம், இளைஞர் வேலை பயிற்சி நிலையம் போன்ற பல அபிவிருத்திக்கு இப்பணத்தை செலவுசெய்யவுள்ளோம்.

எமக்கு இன்றுவரை இலங்கையின் உதைபந்தாட்ட வீரர்கள் பங்குபற்றும் 14 கழகங்கள் ஆதரவு தெரிவித்துள்ளன. இன்னும் நாலைந்து பல கழகங்கள் எமது ஆதரவை வழங்கும். இப்போட்டி உதைபந்தாட்ட ரசிகர்களை மிகவும் பரபரப்பில் ஆழ்த்தவுள்ளது. இதற்றை விட பாடசாலை மாணவர்களும் பங்குபற்றும் போட்டியும் உள்ளது.

இம்முறை யாழ்-லயன்ஸ் கழகம் பெண்களும் இப்போட்டியைக் கண்டு ரசிக்க லயன்ஸ் மாதர்கள் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் பலவகைகளிலும் பெண்களை வரவழைப்பதற்கு நடவடிக்கை எடுத்துவருகின்றார்." (செ

## போனஸ்

[நெல்லியடி]

இ. போ. ச ஊழியர்களுக்கு இம்மாத இறுதியில் போனஸ் வழங்கப்படவுள்ளது. 175 ரூபா போனஸ் பணமாக வழங்கப்படும்.

கடந்த காலங்களில் சம்பளமற்ற லீவில் நின்றவர்களுக்கு போனஸ் பணம் முற்றுமுழுதாக வழங்கப்படுவதில்லை. ஆனால் இம்முறை சம்பளமற்ற லீவில் நின்றவர்களுக்கும் முழுத்தொகையும் வழங்கப்படவுள்ளது.

போனஸ் கொடுப்பனவுநாட்களில் தடையுத்தரவு அல்லது தற்காலிக வேலைநீக்கம் உள்ள ஊழியர்களுக்கும் போனஸ் பணம்வழங்கப்படமாட்டாது

## விசர்நாய் கடித்து இளைஞர் மரணம்

[யாழ்ப்பாணம்]

விசர்நாய்க் கடியினால் ஏற்பட்ட ஏற்பு வலியினால் இளைஞர் ஒருவர் காலமானார். இச்சம்பவம் குப்பிளானில் இடம்பெற்றுள்ளது.

ஒரு மாதத்திற்கு முன் விசர்நாயொன்றினால் கடியுண்ட வைத்திலிங்கம் கனகரத்தினம் என்ற 27 வயது இளைஞர் தெல்லிப்பழை அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டசையடுத்துச் சிகிச்சை பெற்று வீடு சென்றார். பின்னர் தண்ணீர் பருகுவதற்காகக் கஷ்டப்பட்டதையடுத்து யாழ். பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். அங்கு இவர் மரணமானார்.

இது தொடர்பாக மரண விசாரணை நடத்திய யாழ்ப்பாணத் திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் விசர்நாய் கடித்ததால் ஏற்பட்ட ஏற்பு வலியினால் சம்பவித்த மரணமெனத் தீர்ப்பளித்தார். [கா]

## மல்லாகம் நீதிபதியின

# பிரியாவிடையின் போது கிடைத்த மேலிட அறிவித்தல்

(மாவிட்டபுரம்)

இடமாற்றம்பெற்றுச் செல்லவிருந்த நீதிபதிக்கு பிரியாவிடை நடத்த ஒழுங்குகள் செய்துகொண்டிருந்தபோது அவரது இடமாற்றம் நிறுத்தப்பட்டுள்ளதாக அறிவித்தல் வந்தது. இச்சம்பவம் மல்லாகம் நீதிமன்றத்தில் இடம்பெற்றுள்ளது.

மல்லாகம் மாவட்ட நீதிபதியாகக் கடமையாற்றிவந்த திரு. எம். டி. ஜேசுரத்தினம் ஜனவரி மாதம் முதல் பருத்தித்துறை மாவட்ட நீதிபதியாக இடமாற்றம்செய்யப்பட்டதையடுத்து மல்லாகம் நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கத்தினர் அவருக்கு ஒரு பிரியாவிடை விழாவை நடாத்தத் தீர்மானித்து கடந்த வெள்ளிக்கிழமை காலை அவ்விழாவிற்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்தபோது அவரது இடமாற்றம் இரத்துச்செய்யப்பட்டு 3 மாதத்திற்குப் பின்போடப்பட்டுள்ளதாக அறிவித்தல் ஒன்று நீதிபதிக்குக் கிடைத்தது.

இதையடுத்து பிரியாவிடை விழா நிறுத்தப்பட்டது. ஆனால் ஒழுங்குசெய்யப்பட்டிருந்த சில நிகழ்ச்சிகள் மட்டும் இடம்பெற்றன.

சட்டத்தரணிகள் நீதிபதியுடன் புகைப்படமும் எடுத்துக்கொண்டதன் பின்னரே இவ்வறிவிப்பு கிடைத்தது என்பது குறிப்பிடத்தக்கது. [உ]

## மூவருக்கு—

[1ம் பக்கத் தொடர்ச்சி]

4-ம், 5-ம் சந்தேகநபர்களை சட்டத்தரணி ஆர் ஜே செல்வரத்தினத்தின் வேண்டுகோளின் பேரில் தலா 2000 ரூபா பிணையில் செல்ல அனுமதித்தார்

பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்ட நபர்களுக்கு 15 தினங்களுக்கு ஒரு முறை சங்கானைப் பொலிஸில் ஆஜராகவேண்டுமெனவும் உத்தரவிடப்பட்டது [உ]

## எகிப்தில்—

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அதிபர், யுத்தமந்திரி முதலானோர் குதூகலமாக வரவேற்றனர். பின்னர் அவர் ஹெலிகொப்டரில் இஸ்மாலியாவுக்குச் சென்று அதிபர் சதாத்தை சந்தித்தார்.

அதிபர் சதாத்தின் விடுமுறை மாளிகையில் இந்தச் சந்திப்பு நடந்தது. மகாநாட்டு அறையில் முதலில் இருவரும் தனியே சந்தித்துப் பேசினார்கள். பிறகு இருநாட்டு அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

பேச்சுக்கள் மூன்று கட்டங்களாக நடைபெறும். 1969ம் ஆண்டு இஸ்ரேலியர் கைப்பற்றிய பகுதிகளைக் காட்டும் வரைபடங்களை முதலில் இஸ்ரேலிய தரப்பினர் சமர்ப்பிப்பார்கள்.

# "சிங்களத் தொழிலாளரும் தலைவராக ஏற்றுள்ளனர்"

## 'சண்' பற்றி சிங்கள தொ.ச பிரமுகர்

(யாழ்ப்பாணம்)

"தமிழ்த் தொழிலாள, விவசாய மக்கள்மட்டுமன்றி, சிங்களத் தொழிலாளர்களும் திரு. சண்முகதாசனைத் தங்கள் தலைவராக ஏற்றுக்கொண்டுள்ளார்கள். ஒற்றை ஆட்சியின்கீழ், சகல இன மக்களும், தங்கள் தாய் மொழியில் சகும மாற்றவேண்டுமென்று திரு. சண்முகதாசன் பருத்தித்துறை முதல் தெய்வேந்திரமுனைவரை கூறிவருகிறார் இன்று சிங்கள மக்களும் ஏற்றுள்ள ஒரே தமிழ்த் தலைவர் அவர்."

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடந்த வரவு செலவுத் திட்ட எதிர்ப்புக் கூட்டத்தில் பேசிய, சீன சார்புக் கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகர் திரு. காந்தி அபயசேகரா மேற்கண்டவாறு கூறினார்.

திரு. காந்தி அபயசேகரா மேலும் கூறியதாவது:- தென் பகுதியில் பல கூட்டங்களில் சிங்கள மக்கள் மத்தியில், தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளை வழங்கவேண்டும் என திரு. சண்முகதாசன் கூறிவருகிறார். அவர் கூறியதைச் சிங்கள மக்கள் நூற்றுக்கு நூறு வீதம் ஏற்றுவருகின்றனர்.

### ஜே. ஆர். அஞ்சுகிறார்

"ஐக்கிய தேசியக் கட்சியின் வரவு செலவுத் திட்டத்தை எதிர்ப்பதில் பொதுமக்களும், தொழிலாளரும் ஈடுபட்டுவருகிறார்கள். இதனால் பிரதமர் ஜே. ஆர். ஜெயவர்த்தன, பீதி அடைந்துள்ளார். 53-ம் ஆண்டு ஹர்த்தாலின் போது நடந்த சம்பவங்கள் மீண்டும் தலை தூக்குமோ என அஞ்சுகின்றார்.

மக்களின், பங்கீட்டு அரிசியைப் பறிப்பதற்கு, மறைமுகமான திட்டங்கள் நடைபெற்றுவருகின்றன. இது மக்களுக்கு இப்போது தெரியாமலிருக்கலாம். ஆனால் அடுத்த மாதம் கூப்பன் பறிக்கப்பட்ட பின்னரே மக்கள் கொதித்து எழும்போகின்றார்கள்.

"மக்களின் எதிர்ப்பைத் திசை திருப்பவே, பிரதமர் மக்கள் விடுதலை முன்னணித் தலைவர் ரோகண விஜயவீராவை விடுதலை செய்தார். ரோகண விஜயவீராவே, அரசுக்கு ஆதரவாகவும், இடதுசாரி இயக்கங்களுக்கு எதிராகவும் பிரசாரம் செய்துவருகிறார்.

### காட்டிக்கொடுக்கிறார்

"சிறிமா ஆட்சியில் இடதுசாரித் தலைவர்களான என். எம். பெரேரா, பீட்டர் கெனமன் ஆகியோர் சேர்ந்து

(6- பக்கம் பார்க்க)

# "சமூக, பொருளாதார மேம்பாட்டிற்கு கல்வி பயன்பட வேண்டும்"

## முதல்வர் எம். ஜி. ஆர். விருப்பம்

சென்னை டிச 25

"சமூக, பொருளாதார மேம்பாட்டிற்கு கல்வி பயன்படவேண்டும்" என்று தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் கூறினார்.

மாநில கல்வி இலாகாவின் வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு முதல்வர் பேசுகையிலேயே மேற்கண்டவாறு சொன்னார். அவர் மேலும் கூறியதாவது:

"கல்வி முறையில் தீவிர மாற்றம் செய்யப்படவேண்டும். மாணவர்கள் பாடப் புத்தகங்களைப் படிப்பதோடு மாத்திரம் நின்றுவிடக்கூடாது:

அவர்களுக்குக் கல்விமூலம் தற்சார்புத்திறனும் தொழில் திறனும் ஏற்படவேண்டும்.

ஒடுக்கப்பட்ட மக்களும் வாழ்வில் வசதிகுறைந்த மக்களும் கல்வி வசதியில்லாதவர்களாக இருக்கின்றனர். இக்குறை நீங்கவேண்டும்.

### வகுப்புவாதம் இல்லாத சமுதாயம்

கல்வி மூலம் ஜாதி வேறுபாடுகள் ஒழியவும் வகுப்பு வாதமற்ற சமுதாயம் உருவாகவும் வழிபிறக்கும்.

வருங்கால மன்னர்களான மாணவர் நல்வாழ்வில் ஆசிரியர் தீவிர கவனம் செலுத்த வேண்டும். ஆசிரியர்கள் வாழ்வு சிறப்படையவும் அரசு ஆர்வம் கொண்டுள்ளது.

அதே வேளை வருமை… [illegible] …வுமிலாத லட்சக்கணக்கான பக்களின் பொறுப்பும் அரசுக்கு உண்டு என்பதையும் எண்ணிப் பார்க்கவேண்டும்." [உ]

# 'நீதிபதிகள் அதிகரிப்பு வழக்குகளைக் குறைக்காது'

## — பாரத நீதி மந்திரி.

புதுடில்லி, டிச. 25

"நீதிபதிகளின் எண்ணிக்கையைக் கூட்டுவதால் மட்டும் வழக்குகளின் எண்ணிக்கையைக் குறைத்துவிட முடியாது என்பதை அரசு அறியும்" என்று பாரத நீதி அமைச்சர் திரு சாந்திபூஷண் கூறினார்.

பாரத சுப்ரீம் கோர்ட் நீதிபதிகளின் தொகையைப் பதின்மூன்றிலிருந்து பதினேழாக உயர்த்துவதற்கான சட்ட மூலத்தைப் பார்லிமெண்ட் நேற்று ஆமோதித்தது இதை

[5ம் பக்கம் பார்க்க]

# "கட்சி ஒற்றுமைக்கு கடுமையாக உழைப்பேன்"

## காங்கிரஸ் தலைவர் அறிவிப்பு

### விருந்து வைபவத்தில் இந்திரா—ரெட்டி சந்திப்பு

புதுடில்லி, டிச 25

அகில பாரத காங்கிரஸ் நிர்வாகக் கமிட்டியில் இருந்து திருமதி இந்திராகாந்தி ராஜினாமாச் செய்த பின்னர் முதல் தடவையாக அவரும் காங்கிரஸ் தலைவர் திரு. பிரமானந்தரெட்டியும் புதுடில்லியில் நேற்று நடைபெற்ற தேநீர் விருந்து ஒன்றில் சந்தித்து சற்றுநேரம் உரையாடினர்.

இத்தேநீர் விருந்தில் திரு. சுவர்ண்சிங் உட்படப் பல முக்கிய காங்கிரஸ் தலைவர்களும் கலந்துகொண்டனர்.

இவ்வைபவத்தை அடுத்து திரு. பிரமானந்தரெட்டி திருபர்கள் மத்தியில் பேசுகையில் உத்தரப்பிரதேஷ், பீஹார் மாநில இடைத்தேர்தல்கள் பற்றியே தாம் திருமதி காந்தியுடன் பேசியதாகத் தெரிவித்

(5-ம் பக்கம் பார்க்க)

# 'டைம்ஸ்' சஞ்சிகை சதாத்துக்குக் கௌரவம்

லண்டன். டிச 25

இவ்வருடத்தின் தலைசிறந்த மனிதராக அமெரிக்காவில் இருந்து வெளிவரும் 'டைம்ஸ்' சஞ்சிகை எகிப்திய அதிபர் அன்வர் சதாத்தைத் தெரிவு செய்துள்ளது. [உ]

# எம். ஜி. ஆர். நிதி 3 கோடியைத் தாண்டியது

சென்னை, டிச. 25

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனின் வெள்ள நிவாரண நிதிக்கு கடந்த வெள்ளிக்கிழமை வரை 3 கோடி 9 லட்சத்து 61,000 ரூபா சேர்ந்துள்ளது. இது தவிர முதல்வரின் நிதிக்கு 11,646 டொலர்களும், 18 பவுண்களும் வசூலாகியுள்ளன.

**சர்வதேசப் படவிழா:**

# ஜன. 13ல் சென்னையில் ஆரம்பம்

சென்னை, டிச. 25

சென்னையில் ஜனவரி மாதம் 13ம் திகதி நடைபெறவிருக்கும் சர்வதேச திரைப்பட விழாவுக்கு இதுவரை 25 நாடுகள் படங்களை அனுப்பிவைத்துள்ளன. 50 வெளிநாட்டுப் பிரதிநிதிகள் இவ்விழாவில் கலந்துகொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

தென்னாட்டில் முதல் தடவையாக நடத்தப்படும் சர்வதேசத் திரைப்பட விழா இதுவாகும்.

இலங்கையும் இத்திரைப்பட விழாவில் கலந்துகொள்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. [உ]

# ஈ. வே. ரா. சமாதிக்கு கலைஞர் அஞ்சலி

சென்னை டிச 25

திராவிடக்கழக ஸ்தாபகர் ஈ. வே. ரா. பெரியாரின் நினைவுதினம் சென்னையில் கொண்டாடப்பட்டது. இதனையொட்டி திராவிடக் கழகச் செயலாளர் திரு. வீரமணி தலைமையில் மௌன ஊர்வலம் ஒன்று சென்னை அண்ணாசாலையில் ஆரம்பமாகி எழும்பூரில் உள்ள பெரியார் சமாதியை அடைந்தது.

தி. மு. க. தலைவர் கலைஞர் மு. கருணாநிதியும் மற்றும் தலைவர்களும் பெரியார் சமாதிக்கு மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர். [உ]

# மாநிலங்களுக்கிடையில் சுமுகநிலை நிலவ வழி

## அமைச்சர் சரண்சிங் சொல்கிறார்

புதுடில்லி, டிச. 25

"மாநிலங்களுக்கு இடையில் பரஸ்பர பேச்சுவார்த்தைகள், உடன்படிக்கைகள்மூலம் பிரச்னைகள் எழாதவாறு பார்த்துக் கொள்ளலாம்" என்று பாரத உள்துறை அமைச்சர் திரு. சரண்சிங் வலியுறுத்தியுள்ளார்.

புதுடில்லியில் நடைபெற்ற மாநில கவர்னர்கள் மகாநாட்டில் கலந்துகொண்டு அமைச்சர் பேசுகையிலேயே மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

கவர்னர்கள் தத்தம் மாநிலங்களின் நிலைமை குறித்துத் திருப்தி தெரிவித்தனர். உபராஷ்டிரபதியும், பிரதமரும் இம்மாநாட்டில் கலந்துகொண்டனர்.

தென்னாட்டில் ஏற்பட்ட புயல், வெள்ளக் கொடுமை பற்றி மாநாட்டில் கூடுதலாக ஆராயப்பட்டது. [உ]




# பாதுகாப்பு, நம்பிக்கை, சௌகரீகம்

இத் தனிச் சிறப்புக்கள், இலங்கை அடங்கிலுமுள்ள, முதலீடு செய்வோர்களிடையே பொது வழக்குச் சொற்களாகி, ஹவுஸ் அன்ட் புரொப்பெர்ட்டி ட்ரேட்ஸ் லிமிட்டெட்டின் முதலீட்டு திட்டங்களுக்கு சிறந்த சேவையை ஏற்படுத்தியுள்ளன.

நீங்கள் முதலீடு செய்யும்போது உங்கள் பணத்திற்கு சம்பூரணமான முதலீட்டு பாதுகாப்பு அளிக்கப்படுகிறதா என்பதையும் அவ்வாறான முதலீடு, சராசரி வருமானத்திற்கு மேற்பட்ட வருமானத்தையும் உத்தரவாதங்களையும், தனிப்பட்ட விசேஷ சேவை வசதியையும் அளிக்கிறதா என்பதை உறுதி செய்துகொள்ளுங்கள். இவ் வசதிகளை எம்மிடம் முதலீடு செய்வோர் சுமார் இருபது ஆண்டுகளாக பெற்று இன்புற்றுவருகிறார்கள்.

## முதலீட்டுத் திட்டங்கள்

| குறுகிய காலம் | நீண்ட காலம் | கால வைப்புகள் |
|---|---|---|
| 12% | $16\frac{1}{2}$% | 18% |
| "முதலீட்டு சான்றிதழ்" வட்டியுடன் முதலீடு செய்த பணத்தை வட்டியுடன் இலகுவில் மீட்டுக்கொள்ளலாம். | 1 வருடம் - 14 1/2% வருடமொன்றுக்கு<br>2 வருடம் - 15% வருடமொன்றுக்கு<br>3 வருடம் 15 1/2% வருடமொன்றுக்கு<br>4 வருடம் - 16% வருடமொன்றுக்கு<br>5 வருடம் - 16 1/2 வருடமொன்றுக்கு<br>முதலீட்டை அனுகூலங்களுடன் மீட்டுக் கொள்ளலாம் | 6 மாதங்கள் - 12% வருடமொன்றுக்கு<br>12 மாதங்கள் - 15% வருடமொன்றுக்கு<br>18 மாதங்கள் - 18% வருடமொன்றுக்கு<br>முதலீட்டை அனுகூலங்களுடன் மீட்டுக் கொள்ளலாம். |
| மாதாந்த வட்டி | மாதாந்த வட்டி | முதிர்ச்சியின் பேரில் வட்டி |

ஹவுஸ் அன்ட் புரொப்பெர்ட்டி ட்ரேட்ஸ் லிமிட்டெட்,

யாழ்ப்பாணக் கிளை

2—3, நவீன சந்தை, பெரியகடை, யாழ்ப்பாணம்.

தொலைபேசி; 7698, யாழ்ப்பாணம்;

[illegible] H.P.T. [illegible] கொழும்பு-8

"கூப்பனை எடுப்போம் எனக் கூறி

# தேர்தலில் போட்டியிட்டிருந்தால் யு. என். பி. வெற்றி பெற்றிருக்காது"

## யாழ். நகரில் திரு. சண்முகதாசன்

(யாழ்ப்பாணம்)

"கடந்த தேர்தலின்போது யூ. என். பி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூப்பன் அரிசியை நிறுத்துவோம்' என்று கூறிப் பிரசாரம் செய்திருந்தால் ஒரு தொகுதியில்கூட யூ என். பி. வெற்றிபெற்றிருக்காது"

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடந்த "கூப்பன் அரிசி வெட்டு' எதிர்ப்புக் கூட்டத்தில் பேசிய சீனசார்பு கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச்செயலாளர் திரு என். சண்முகதாசன் மேற்கண்டவாறு கூறினார்.

திரு கே. ஏ. சுப்பிரமணியம் தலைமையில் நடந்த கூட்டத்தில், திரு. சண்முகதாசன் மேலும் கூறியதாவது;

### யார் இந்த ஜே. ஆர்.

"யார் இந்த ஜே. ஆர். என்பதை நீங்கள் அறியவேண்டும். 1944ம் ஆண்டு சட்டசபையில் தனிச்சிங்களத்தைக் கொண்டுவந்தவர் இவர்தான். பின் 53ல் அரிசி விலையை 25 சதத்திலிருந்து 70 சதமாக்கியவர் இவர்தான். பின் 57-ல் பண்டா - செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து கண்டியாத்திரை சென்றவர் இவர்தான். பின் 60ம் ஆண்டு, இலங்கையை இரண்டாகப் பிரித்துப் படம்போட்டு, சுதந்திரக்கட்சியினர் நாட்டைப் பிரித்துக் கொடுக்கப்போகிறார்கள் என, நாடு முழுவதும் பிரசாரம் செய்து சிங்கள மக்களை தமிழருக்கெதிராகக் கிளப்பிவிட்டவர் இவர்தான். இப்படியானவரிடம்தான் இன்று கூட்டணியினர் நம்பிக்கை வைத்து உறவாடி வருகிறார்கள். அதுமட்டுமல்ல அண்மையில் கலவரத்தின்பின் போர் என்றால் போர் சமாதானமென்றால் சமாதானம் என்றும் கூறி, கலவரங்களைப் பல பகுதிகளுக்கும்பரவ வழி அமைத்துக்கொடுத்தவரும் இவர்தான்.

### கூப்பன் அரிசி இழப்பு

மக்கள் இவ்வளவுகாலம் பட்டுவந்த கஷ்டத்தோடு கூப்பன் அரிசியையும் இழந்துவிட்டார்கள். எத்தனையோ குடும்பங்கள் 72 சதத்திற்கு கூப்பன் சீனியைப் பெற்று 5 ரூபா விறகு விற்றுத்தான் வாழ்க்கை நடத்தி வந்தார்கள். இன்று கூப்பன் சீனிக்கு ஆபத்து ஏற்பட்டுவிட்டது.

கூட்டுத் தொழிற்சங்கங்களில் யூ. என். பி, திரு. தொண்டமான் தொழிற்சங்கங்களைவிட மற்ற எல்லாத் தொழிற்சங்கங்களும் இணைந்திருக்கின்றன. இன்று யூ. என். பிக்கு எதிராக தேர்தலில் வாக்களித்தவர்கள் மட்டும் அரசை எதிர்க்கவில்லை. தேர்தலில் யூ. என். பியை ஆதரித்தவர்களே இன்று எதிர்க்கிறார்கள்.

### தெற்கில் ரோஹன்

திரு. ரோஹன் விஜயவீரா ஐக்கியதேசியக்கட்சியை மறைமுகமாக ஆதரித்துவருகிறார். தெற்கில், திரு. ரோஹன்விஜயவீரா ஆதரிப்பதுபோல் வடக்கில் கூட்டணியினர் மறைமுகமாக யூ என். பி.யை ஆதரித்து வருகிறார்கள்.

கடந்தவாரம் இங்கு நடந்த தொழிற்சங்கக்கூட்ட மொன்றில், வயதுபோய்விட்டதற்காக இடதுசாரித் தலைவர்களை ஒதுக்கக்கூடாது என்று ஒருவர் பேசியிருக்கிறார். வயதுபோய் விட்டதற்காக நாம் எவரையும் ஒதுக்கவில்லை. கொள்கை மாறிவிட்டார்கள் என்பதற்காகத்தான் எதிர்க்கிறோம். தொழிலாளரின் 21 அம்சக் கோரிக்கையைப்புறக்கணித்தபடியால்தான் அந்த இடதுசாரித் தலைவர்களைப்புறக்கணிக்கின்றோம்.

### 53-ம் ஆண்டு ஹர்த்தால்

53-ம் ஆண்டு ஹர்த்தால் பற்றி உங்களுக்கு ஞாபகமூட்ட வேண்டியது என் கடமை. அப்போது மத்திய வங்கியின்கவர்னராக ஓர் அமெரிக்கர் இருந்தார். டி. எஸ். சேனநாயகா காலமானதும், அவரது மகன் டட்லி சேனநாயக்கா பிரதமராக வந்தார். மத்திய வங்கிக் கவர்னர் பிரதமர் டட்லியை அழைத்து பொருளாதார நெருக்கடி உருவாகியுள்ளதாகவும், அதனால் இப்போ அரிசிவிலையைக் கூட்டினால் எதிர்ப்புக் கிளம்புமென்றும், உடனடியாக தேர்தலைவைத்து அதன்பின் நடவடிக்கைஎடுக்குமாறும் ஆலோசனை கூறினார்.

உடனே பிரதமர் டட்லி 1952ல் தேர்தலை நடத்தி தந்தையின் பெயரைச்சொல்லி மக்களின் வாக்குக்கேட்டு வெற்றிபெற்றார். நிதிமந்திரியாகப் பதவியேற்ற ஜே. ஆர். ஜெயவர்த்தன முதலாவது வரவு-செலவுத் திட்டத்தில் 25 சதமாக இருந்த அரிசியின் விலையை 70 சதமாக்கினார். போக்குவரத்துக்கட்டணத்தை அதிகரித்ததுடன், முத்திரை விலையைக் கூட்டினார். பாடசாலைப் பிள்ளைகளின் நண்பகல் பணிஸையும் நிறுத்தினார். இதனால் இடதுசாரிதொழிற்சங்கங்கள் ஒன்றுகூடி ஹர்த்தாலை நடத்தியது. இதனால் 56ல் யூ. என். பி. படுதோல்வி அடைந்தது. அதேபோல்தான் தேர்தல் முடிந்ததும் இன்றும் அதே ஜே ஆர். ஜெயவர்த்தன, அரிசியில் கைவைத்து, மக்களின் வயிற்றில் அடித்திருக்கிறார்.

### வர்த்தக வலயம்

சுதந்திர வர்த்தகவலயத்தை சில கூட்டணி எம். பிக்கள் புகழ்ந்து பேசியிருக்கிறார்கள். வர்த்தகவலயம் என்றால் என்ன என்பது பலருக்குப் புரியவில்லை.

பிரிட்டிஷார்எங்களைஆண்ட போது. முழு இலங்கையையும் வர்த்தக வலயமாக்கி மக்களைச் சுரண்டினார்கள். இன்று யூ என். பி. அரசு ஒருசில பகுதிகளை வர்த்தக வலயமாக்கி மீண்டும் சுரண்டலுக்கு வழிவகுக்கிறது. இதனைத்தான் கூட்டணி எம். பிக்கள், தெரிந்தோ தெரியாமலோ பாராட்டியிருக்கிறார்கள் மறைமுகமாக ஏகாதிபத்தியவாதிகளுக்கு சுரண்ட சில பகுதிகளை இந்த அரசு ஒதுக்கிக்கொடுத்துள்ளது.

இந்த வர்த்தக வலயத்தில் தொழில்பார்க்கும் தொழிலாளர்கள் தொழிற்சங்கம் அமைக்க முடியாது. தொழிற்கோட்டுக்குப் போகமுடியாது. சம்பள உயர்வுகோரமுடியாது. இவையெல்லாம் கூட்டணித் தலைவர்களுக்குத் தெரியாதா?

குறைந்த சம்பளம்பெறும் தொழிலாளர்களைக் கொண்டு வெளிநாட்டு ஏகாதிபத்தியவாதிகள் மீண்டும் சுரண்ட முற்படுவதை கூட்டணி எம். பி.க்கள் எப்படி ஆதரிக்க முடியும்?

## கா. யோகநாதன்

### இ. போ. ச. தனியார்துறை

இந்த அரசு துல்கிரியா, வியாங்கொடை ஆலைகளை தனியார்துறைக்கு ஒப்படைக்க நடவடிக்கை எடுத்துள்ளது. ஜவுளி ஆலைகள் எல்லாவற்றையும் தனியார்துறைக்குக் கொடுக்க முயற்சிக்கிறது. இதனால்தொழிலாளர் பாதிக்கப்படப்போகிறார்கள்.

இலங்கைப் போக்குவரத்துச் சபை ஒருபகுதி பஸ்களையும் தனியார்துறையிடம் ஒப்படைக்க அரசு ஆலோசித்துவருகிறது.

### தமிழ இளைஞர் பாதிப்பு

இந்தியாவிலிருந்து மிளகாய் வெங்காயம் இறக்குமதி செய்வதன்மூலம், வடபகுதி தமிழ் இளைஞர்கள் வாழ்வில் இந்த அரசு மண்ணடித்துவிட்டது. கடந்த 7 வருடகாலமாக, வடபகுதி இளைஞர்கள், இந்நாட்டுக்குத்தேவையான வெங்காயம், மிளகாயை உற்பத்திசெய்தார்கள். உத்தியோகத்தை எதிர்பார்த்துப் படித்த தமிழ் இளைஞர்கள்பலர், விவசாயத்தில் ஈடுபட்டு முன்னேறினர். விவசாயத்துறைமூலம் வடபகுதி முன்னேறியது. இவ்வருடம் உற்பத்தியில் பாதிப்பு ஏற்பட்டதைக் காரணம் காட்டி." இந்தியாவிலிருந்து அரசு வெங்காயம், மிளகாயை இறக்குமதி செய்கிறது. இதனால் வடபகுதி இளைஞர் இனிமேல் விவசாயத்தைக் கைவிட வேண்டிய நிலை உருவாகியுள்ளது இப்படியான அரசைத்தான் கூட்டணி எம். பி. க்கள் பாராட்டிப்புகழ்ந்து ஆதரவழித்துவருகிறார்கள்.

தென்பகுதியில்கூட நுவரெலியாவில் உருளைக்கிழங்கு உற்பத்திசெய்யப்பட்டுவந்தன அரசு உருளைக்கிழங்கையும் இறக்குமதிசெய்து சிங்கள இளைஞர்களின் வயிற்றில் அடித்துவிட்டது.

### விலைகள் அதிகரிப்பு

இன்று சகல சாமான்களின் விலைகளும் அதிகரித்துவிட்டது.

சாப்பாட்டின்விலை அதிகரித்துவிட்டது. தேநீர்விலை குறைந்தாலும் அளவும் குறைந்துவிட்டது. 17 ரூபாவிற்குப் பெற்ற மருந்தின்விலை 34ரூபாவாகிவிட்டது. வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாகும் பொருட்கள் விலை எல்லாம் இரட்டி பாகிவிட்டது

சிங்கப்பூரைப் பின்பற்றித்தான், அரசு வர்த்தக வலயத்தை இங்கு உருவாக்குகிறது. அதுமட்டுமல்ல, சிங்கப்பூரில் நடைமுறையிலுள்ள உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தைத்தான் இங்குகொண்டு வரவிருக்கிறது.

### உள்நாட்டு பாதுகாப்பு

சிங்கப்பூரில் உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் எதிர்க்கட்சித் தலைவர்கள், தொழிற்சங்கத் தலைவர்கள், நீண்டகாலம் சிறைவைக்கப் பட்டுள்ளனர். இதனை அரசை ஆதரிக்கும் எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம் அறியவில்லையா?

பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்படும் ஒருவரை நீதிமன்றத்தில் ஆஜராக்காமல் ஒருமாதம் தடுத்துவைத்திருக்கலாம். வேலைநிறுத்தம் தொழிற்சங்க நடவடிக்கை எதுக்கும் இடமிருக்காது.

சிறிமா அரசாங்கம், அவசரகாலசட்டத்தின்கீழ் தொழிற்சங்கங்களை நசுக்கினார். மக்களைக் கஷ்டப்படுத்தி, இளைஞர்களை ஆண்டுக்கணக்கில் சிறையிலடைத்தார். ஆனால் யூ என். பி அரசு இதற்காக புதிதாகவே உள்நாட்டுப்பாதுகாப்புச் சட்டம் ஒன்றைத் தயாரிக்கிறது.

மக்களில் நூற்றுக்கு 50 வீதமானோர் 30 வயதிற்குட்ட இளைஞர்களாக இருக்கிறார்கள் இவர்கள் புரட்சி எண்ணம் கொண்டவர்களாக இருக்கிறார்கள். இவர்களைச்சரியான வழியில் இயங்கச் செய்ய வேண்டும்.

தொழிலாளர்கள், விவசாயிகள், மாணவர்கள் புத்திசாலிகள் ஒன்றுபட்டு ஒரேஅணியில் திரண்டுவிட்டால் அரசினால் எதுவுமே செய்ய முடியாது.

### நியாயமான உரிமை

தமிழ் மக்களுக்கு நியாயமான உரிமை வழங்க வேண்டுமென்று சிங்களமக்கள் மத்தியில் பேசி, அவர்கள் ஆதரவைத் திரட்டி வருகின்றேன். நிச்சயமாக தொழிலாளர், விவசாயிகளைக் கொண்ட புரட்சி அரசு உருவானால் தமிழர் பிரச்னை தீரும்.

பாராளுமன்றம் மூலம் பிரச்னைகளை தீர்க்க முடியாது என நாம் கூறியபோது அதனை ஏற்க மறுத்தவர்கள் இன்று நமது வழியே சரியென்பதைப் புரிந்துகொண்டார்கள் பாராளுமன்றத் தேர்தல்மூலம் யு. என். பி. அரசை வீழ்த்த முடியாதென்பதை சகல தொழிற்சங்கங்களும் உணர்ந்துவிட்டன. தொழிலாளர்கள் ஒன்றிணைந்த போராட்டத்தின் மூலமே ஒரு புரட்சி அரசை ஏற்படுத்த முடியும் என்பது இன்று உறுதியாகிவிட்டது.

### இடதுசாரி இணைப்பு

இடதுசாரிகளுடன் சேர்ந்து உரிமை பெறப் போவதாக இன்றுகூட்டணியினர் கூறிவருகின்றனர் கடந்தஅரசின்போது பங்காளராக இருந்த இடதுசாரித் தலைவர்களான டாக்டர் என் எம் பெரேரா, பீட்டர் கெனமன், 6 வருடங்களாக தமிழர் உரிமைபற்றி எதுவுமே பேசவில்லை. தமிழர்களுக்கு அநீதி நடக்கும்போது பார்த்துக் கொண்டு இருந்தார்கள். இன்று தேர்தலில் தோற்றபின் தமிழர்மீது அவர்களுக்கு அக்கறை ஏற்பட்டுவிட்டது. சமசமாஜக்கட்சி, அரசில் ஒட்டிக் கொண்டிருந்தபோது திரு. வாசுதேவ நாணயக்கார அக்கட்சியிலிருந்தார். அந்நேரம் அவர் கட்சிக் கூட்டங்களில் சுயநிர்ணய உரிமைபற்றி வாய் திறக்கவில்லை.

### தமிழ்நாடு கோரிக்கை

தமிழ்நாடு கோரிக்கை ஒரு பிற்போக்குவாத கோரிக்கை. நிறைவேறாத கோரிக்கை. இதை நாம் அன்று சொன்னோம். மக்கள் நம்பவில்லை. தமிழரின் உரிமை பெறவேண்டுமானால் முற்போக்கு எண்ணம் கொண்ட சிங்களமக்களின் நல்லெண்ணத்தைப் பெற வேண்டும். (ச)

இப்பகுதி ஆசிரியர்களுக்கு

## கலவரகால முற்பணம் இன்னும் கிடைக்கவில்லையாம்

[வவுனியா]

கடந்த ஆகஸ்ட் மாத வன்செயலின் போது பாதிக்கப்பட்ட வவுனியாவைச் சேர்ந்த ஆசிரியர்கட்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் மூன்று மாத சம்பளம் இன்னும் வழங்கப்படவில்லை.

வவுனியா கல்வி அலுவலகத்தைச் சேர்ந்த அனைவருக்கும் கொடுக்கப்பட்டும் ஆசிரியர்கள் விண்ணப்பங்கள் இதுவரை கவனிக்கப்படாமல் இருப்பதின் மர்மம் என்னவென்று கேட்கப்படுகின்றது

விண்ணப்பித்த ஆசிரியர்களில் ஒருவர் கல்விப்பணிமனையால் கடமை லீவில் அநுராதபுரத்திற்கு அனுப்பப்பட்டு அங்கு தாக்கப்பட்டவர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதுபற்றி ஆசிரியர்கள் பலர் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க வவுனியா கிளைச் செயலாளரிடம் முறையிட்டுள்ளார்கள்.

## ஹன்டிக்கு அஞ்சலிக் கூட்டம் பற்றி ஆலோசிப்பர்

[யாழ்ப்பாணம்]

அமரர் எஸ். ஹன்டி பேரின்பநாயகத்தின் நினைவாக அஞ்சலிக் கூட்டமொன்றை நடத்துவதற்காக எதிர்வரும் 27ந் திகதி யாழ் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள யாழ் ஐக்கிய வியாபாரச் சங்கச் செயலக அறையில் கூடவுள்ளனர்.

முன்னாள் வடமாகாண ஆசிரியர் சங்கத்தின் தலைவரும், யாழ் வாலிபர் காங்கிரஸ் தலைவருமான திரு. சி. சுப்பிரமணியம், யாழ் மாவட்ட ஆசிரியர் சங்கத்தைச் சேர்ந்த திரு எம். குமாரசாமியும் அழைப்புக்களை விடுத்துள்ளனர்.

## மீண்டு வேலை

(வவுனியா)

1972-ம் ஆண்டுக்கும்பின்பு நியமனம்பெற்று வேலைநிறுத்தம் செய்யப்பட்டவர்கள் தொடர்பான தொழிற்சங்கம் அமைச்சரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியதின் பயனாக அமைச்சர் காமினி திசநாயக்கா வேலைநிறுத்தம் செய்யப்பட்டவர்களுக்கு மீண்டும் வேலை வழங்கும்படி வேலைகள் பணிப்பாளருக்கும், அவர்கள் மூலம் சகல நிறைவேற்றுப் பொறியியலாளர்களுக்கும் அறிவித்துள்ளார்.

இத்தகவலை தொழிற்சங்கச் செயலாளர் திரு. விஜயரத்தினம் தெரிவித்தார். அவர் தொழிற்சங்கச் சார்பில் அமைச்சருக்கு நன்றிதெரிவித்துள்ளார்.

சூசி

∴ கலண்டர்கள்
∴ டயறிகள்
∴ பிளாஸ்டிக் டயறிகள்

மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்கும்

V

வடபகுதி விநியோகஸ்தர்கள்

S P. சாமி அன் கொம்பனி

193, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

வெலிங்டன் (யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-சுஜாதா-ஜெய்கணேஷ்
**முத்தான முத்தல்லவோ**

பிரேமா (யாழ்.நகர்) எம். ஜி. ஆர். லதா நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
போன் 7693
**நீதிக்கு தலைவணங்கு**

Regal (Jaffna)
Daily at 4-45 7-00 & 9-30 P. M. only
**BARAKA FOR SECRET SERVICE**
(Spy Color - Scope)

மனோஹரா (யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - ஜெமினி - லக்ஷ்மி - நிர்மலா
**உனக்காக நான்**
(ஈஸ்ட்மன் கலர்)

வின்ஸர் யாழ்ப்பாணம் தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் ரஜனிகாந்த்
எம்.எஸ். விஸ்வநாத் ஸ்ரீதேவி-ஒய். விஜயா
**மூன்று முடிச்சு**
திரை கதை வசனம், டைரக்ஷன்: கே. பாலசந்தர்

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) நத்தார் - புதுவருட வெளியீடு
தினசரி 4 காட்சிகள்
தென்னகத்தில் 100 நாட்களுக்குமேல் ஓடிய வெற்றிச் சித்திரம்
★ முத்துராமன் ★ ஜெயசித்திரா
★ சுந்தரராஜன் ★ ஸ்ரீகாந்த்
வி. கே. ராமசாமி, தேங்காய் சீனிவாசன்
குமாரி பத்மினி நடித்த
அவள் ஒரு தொடர்கதை, பெண் தெய்வம் வரிசையில் மற்றுமோர் வெற்றிப் படைப்பு.
**இன்ஸ்பெக்டர் மனைவி**
திரைக்கதை - வசனம் - டைரக்ஷன்
A. C. திருலோகசந்தர் M. A.
இசை இன்னிசை வேந்தர்கள் சங்கர், கணேஷ்


துப்பாக்கி அபகரிப்பு வழக்கு:

# 1-ம் எதிரிக்கு ஒரு ஆண்டு கடூழியச் சிறை "ஒரு பாடமாக அமையட்டும்"

## — மல்லாகம் மாவட்ட நீதிபதி

[மாவிட்டபுரம்]

"சமுதாயத்தில் அப்பாவிப் பொது மக்களுக்குத் தொல்லை விளைவிப்பதுடன் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடும் இளைஞர்களுக்கு இத்தண்டனை ஒரு நல்ல பாடமாக அமையட்டும்."

இவ்வாறு மல்லாகம் மாவட்ட நீதிபதி திரு எம். டி. ஜேசுரட்னம் உரும்பராய் துப்பாக்கி அபகரிப்பு வழக்கில முதலாம் எதிரியான வசந்தகுமாருக்கு ஒரு வருடக் கடூழியச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கையில் கூறினார். உரும்பராயைச் சேர்ந்த செல்லையா நடராஜா என்பவரது வீட்டினுள் அத்துமீறி நுழைந்து அவரை மிரட்டி அவரது துப்பாக்கியை அபகரித்ததாக உரும்பராயைச் சேர்ந்த பீ. வசந்தகுமார், அராலியைச் சேர்ந்த கே. நகுலேஸ்வரன் ஆகியோர்மீது குற்றஞ்சாட்டி சுன்னாகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜனப் இ. ஏ. காதர் இவ்வழக்கைத் தாக்கல் செய்திருந்தார்.

இரண்டாம் எதிரியை விடுதலை செய்த நீதிபதி முதலாம் எதிரிக்கு மேற்படி தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கையில் கூறியதாவது:-

"இப்பகுதியில் துப்பாக்கிக் கொள்ளைகள், பணம், நகை, கொள்ளை, கார் கடத்தல் போன்ற சம்பவங்கள் பெருகி வருகின்றன. ஆகவே இவற்றில் ஈடுபடுபவர்களுக்குக் கடுமையான தண்டனை வழங்குவதன் மூலமே இது மற்றவர்களுக்கு ஒரு பாடமாக அமைய முடியும். ஆகவேதான் மேற்படி நபருக்கு கடும் தண்டனை வழங்கவேண்டியேற்பட்டது. இவ்வாறான குற்றங்களுக்கு கடுமையான தண்டனை வழங்குவதே அவற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்கக்கூடிய நடவடிக்கையாகும்." (உ)

# உள்ளூராட்சித் தேர்தல்: ஜி.ஜி.காங்கிரஸ் போட்டியிடும்

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் தமிழீழ ஜி ஜி காங்கிரஸ் போட்டியிடும் என ஜி ஜி காங்கிரஸ் பொருளாளர் திரு. க. இராமநாதன் தெரிவித்தார்.

நல்லூர், சாவகச்சேரி, மானிப்பாய் தொகுதிகளில் நடைபெறும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் போட்டியிட முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் மற்றும் தொகுதிகள் பற்றி அடுத்த கமிட்டிக் கூட்டத்தில் ஆலோசிக்கப்படுமென்றும் கூறினார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் வேலைகளைக் கவனிக்க மானிப்பாய்த் தொகுதிக்கு திரு. சி. பொ முதலியாரும், சாவகச்சேரித் தொகுதிக்கு திரு வி. குமாரசாமியும், நல்லூர் தொகுதிக்கு திரு க இராமநாதனும் தெரிவு செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார். (உ)


நாகபூஷணி (சுன்னாகம்)
தினசரி பி.ப. 6-45, 10-00
சனி, ஞாயிறு பி. ப. 2-30
எம்.ஜி. ஆர்-லதா
**உழைக்கும் கரங்கள்**

வெலிங்டன் (மானிப்பாய்)
தினசரி, 2-30, 6-30, 9-30
சிவாஜி — ஜெமினி
**பந்தபாசம்**

புலோலி சினிமாஸ் (பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30,
ரவிச்சந்திரன்-ராஜன்
**டில்லிமாப்பிள்ளை**


## நீதிபதிகள்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்தே அமைச்சர் திரு. சாந்திபூஷண் மேற்கண்டவாறு கூறினார்.

வழக்குகளின் எண்ணிக்கை குறையவேண்டுமானால் நாட்டின் மொத்த விசுவாசம்மூலமே அது சாத்தியம் என்றார் அவர். (உ)

## வானொலியில் இன்னிசை விரிவுரை

ஸ்ரீலஸ்ரீ பரமாசாரிய சுவாமிகளது பிரதம சிஷ்யன் காலகதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா இன்று இரவு 10-15 மணியிலிருந்து 11 மணி வரை இலங்கை வானொலியில் 'திருநாளைப்போவார்' பற்றி இன்னிசை விரிவுரை நிகழ்த்துவார்.

## கட்சி...

[3ம் பக்கத் தொடர்ச்சி]

தார்.

கட்சியின் ஒற்றுமைக்காகத் தாம் கடுமையாக உழைக்கப் போவதாகவும் திரு. ரெட்டி கூறினார்.

### ஆலோசித்த பின்பே பதில்

திருமதி காந்தியின் ராஜினாமாக் கடிதம் குறித்து தான் சகாக்களுடன் கலந்தாலோசித்த பின்னரே பதில் அனுப்பப்போவதாகவும் அவர் தெரிவித்தார்.

### இந்திரா ஆதரவாளர் மாநாடு

இதேவேளை திருமதி காந்தி ஆதரவாளர்களின் உத்தேச மாநாடு ஜனவரி 1-ம், 2-ம் திகதிகளில் நடைபெறவிருக்கிறது.

இம்மாநாட்டுக்கான அழைப்பிதழ்கள் தயாராக இருக்கின்றனவாம்.

நான்கு சிரேஷ்ட காங்கிரஸ் தலைவர்களின் பெயர்களில் இவ்வழைப்புகள் அனுப்பப்படும் எனத் தெரியவருகிறது. [உ]


RIO (Jaffna) Daily 4 Shows
**VIOLENT ONES**
By Popular Demand From 29-31 St
**EYE WITNESS**

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 10-30, 2.30, 6.00, 9.30.
எம். ஜி. ஆர்-விஜயா, நாகேஷ் நடித்த
**விவசாயி**
(புதிய பிரதி)

சாந்தி (யாழ். நகர்) போன் 7648.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
சிவாஜி...... சோவின்...... நாகேஷ்......
**"நீலவானம்"** கதைவசனம்: K. பாலசந்தர் (புதிய பிரதி)
அடுத்த வெளியீடு கலைஞர் கருணாநிதியின்
**பூம்புகார்** (புதிய பிரதி)



யாழ். மாவட்டத்தில் **ராஜா** திரையரங்கில் மட்டும்
26-12-77 முதல் எல்லாக் காட்சிகளிலும் தமிழ்த் தலைவர் அமரர் தந்தை செல்வாவின் இறுதி யாத்திரைக் காட்சி காண்பிக்கப்படும்.
எஸ். ரி. ஆர். பிலிம்ஸ் வெளியீடு

கொட்டகை நிறைந்த காட்சிகளுடன் 100-வது நாளை நோக்கி விறுநடைபோடும் ஈடு இணையற்ற திரைக்காவியம்

P. V. C. தயாரிப்பு
ஜெமினி
கே. ஆர். விஜயா
விஜயகுமாரி
★ **தசாவதாரம்** ★
சீர்காழி கோவிந்தராஜன்
ஸ்ரீதேவி
ரவிகுமார்
(கலர்)

| காட்சி நேரங்கள் | |
|---|---|
| காலை | 10-15 |
| பி. ப. | 2.00 |
| மாலை | 6.00 |
| இரவு | 9-45 |

திரைக்கதை, வசனம், டைரக்ஷன் கே. எஸ். கோபாலகிருஷ்ணன்

### மணிவாக்கு

ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் சமனுறை நிறைந்தால் யார் யாரைப் பகைக்க முடியும்? - காந்திமகான்

ஈழநாடு

The Eelanaadu

## சொல்லும் செயலும்

கடமை நேரத்தில் மதுபோதையிலிருக்கும் இலங்கைப் போக்குவரத்துச்சபை ஊழியர்கள் வேலையிலிருந்து நீக்கப்படுவார்கள். எக்காரணம் கொண்டும் அவர்களுக்கு மன்னிப்பு அளிக்கப்படமாட்டாது என்று போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம் எச் முகம்மது அட்டனுக்குச் சென்றிருந்தபோது கூறியிருக்கிறார்.

குடிபோதையிலிருக்கும் ஊழியர்களைக் கண்டுபிடித்து விசாரணை நடத்த விசேஷ குழு ஒன்றும் நியமிக்கப்படுமென்றும் அமைச்சர் தெரிவித்திருக்கிறார்

அமைச்சரின் இந்த உறுதிமொழிகள் பஸ் பிரயாணிகளுக்கு நிச்சயம் ஆறுதளிக்கும்.

இ. போ. ச. என்ற மூன்றெழுத்துக்கு 'இலங்கைப் போக்குவரத்துச்சபை' என்று விளக்கம். ஆனால் பொதுமக்களைப் பொறுத்தவரையில் இதற்கு இதில் போனால் சங்கடம் என்றுதான் அர்த்தம்.

பஸ்ஸில் பிரயாணம் செய்பவர்கள் தங்கள் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டுதான் பிரயாணம் செய்ய வேண்டும்.

எந்தச் சமயத்தில் விபத்து நிகழுமோ என்ற அச்சத்துடன்தான் பயணம் செய்ய வேண்டியுள்ளது"

இ. போ. ச. பஸ்களைக் கண்டதுமே எமன் வருகிறது என்று வீதியில் செல்வோர்களே அச்சத்துடன் கூறுகின்ற நிலை உள்ளது.

பல விபத்துக்கள் நிகழ்ந்து பல உயிர்கள் பலிகொள்ளப்பட்டிருக்கின்றன. இந்த மரண விசாரணைகளில் பலவற்றிலும் இ. போ. சபை ஊழியர்கள்மீதே குற்றம் சாட்டப்பட்டிருக்கின்றன.

பல சந்தர்ப்பங்களில் இ. போ. சபை பெருந்தொகை பணத்தை நஷ்டஈடாகவும் கொடுத்திருக்கின்றது.

ஆனாலும் இன்னமும் விபத்துக்கள் நடந்துகொண்டுதானிருக்கின்றன.

பஸ்களில் மிதிபலகைப் பிரயாணம் தடைசெய்யப்பட்டது; புகைத்தல் தடைசெய்யப்பட்டது; பஸ்சாரதிகள் மதுபோதையில் இருப்பதற்கும் தடைசெய்யப்பட்டது.

ஆனால் இவை செயல்படுத்தப்படுகின்றனவா?

தனியார் துறையிடம் பஸ் போக்குவரத்துச்சேவை இருந்தபோது ஆசனங்களுக்கு அதிகமான பிரயாணிகளை ஏற்றிச் சென்றால் பொலிசார் நடவடிக்கை எடுப்பார்கள். பஸ் ஊழியர்கள் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டுத் தண்டிக்கப்படுவார்கள்.

இன்று அதிக பிரயாணிகளை ஏற்றி அதிக வருமானம் ஈட்டுபவர்களுக்கு ஊக்க போனஸ் வழங்கப்படுகிறது.

போக்குவரத்து அமைச்சர் பல இடங்களுக்கும் நேரில் சென்று நிலைமையை அவதானித்து வருகிறார்.

இது பாராட்டுக்குரியது; ஆனால் அவர் போகுமிடங்களிலெல்லாம் வாக்குறுதிகளை அதிகமாக வழங்குகின்றார்.

வாக்குறுதி அளிப்பது சுலபம். அதை நிறைவேற்றுவது கஷ்டம். முன்னைய அரசாங்கங்களில் அங்கம் வகித்த அமைச்சர்கள் பலரும் சென்றவிடமெல்லாம் வாக்குறுதிகளை அள்ளி வீசினர்.

அதன் பலனை அவர்களே அனுபவித்தனர்.

போக்குவரத்து அமைச்சரும் கடந்தகால அனுபவங்களைச் சிந்தித்துச் செயல்படுவது அவசியம்

சொல்வது யாவர்க்கும் எளிது செய்வதுதான் கடினம்.

இதை அமைச்சர்கள் முக்கியமாகக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

# "நடவடிக்கைகளை துரிதப்படுத்தி இலட்சியத்தைஈட்டுவோம்"

## மகளிர்பேரவை வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

"ஐக்கிய தேசியக் கட்சி அரசைப் பொறுத்தமட்டில் தமிழ் இன உரிமையை தந்துவிடுமென்று யாரும் எதிர்பார்க்க முடியாது. எமது ஒவ்வொருவருடைய இதயதாகமும் தமிழ்ஈழ லட்சியமே. இந்த லட்சியத்தை எந்த அரசினாலும் நிறைவேற்ற முடியாது. எமது நடவடிக்கையை துரிதப்படுத்தி இந்த லட்சியப் பாதையில் எம்மைக் கொண்டுசெல்ல வேண்டும்."

தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர்களை இவ்வாறு கேட்டுக்கொள்ளும் தீர்மானம் தமிழ் மகளிர் பேரவை நடவடிக்கைக்குழுக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது.

தமிழர் விடுதலைக்கூட்டணி தலைமைச் செயலகத்தில்நேற்று முன் தினம் திருமதி நாகேஸ்வரி வேலுப்பிள்ளை தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி நடவடிக்கைகள்பற்றி ஆராயப்பட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர்களாக இருக்கும் அத்தனைபேரும் தீவிரமாக இயங்க வேண்டும் என்று கூட்டணி தலைவர்களை வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளும் தீர்மானமும் நிறைவேறியது

தமிழர் விடுதலைக் கூட்டணியின் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த வேண்டும் என்றும் அமைப்புகளைச் சேர்த்து போராட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு கூட்டணித் தலைவர்களைக் கேட்டுக் கொள்ளும் மற்றொரு தீர்மானமும் நிறைவேறியது.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களில் பூரண நம்பிக்கையிருப்பதாகவும் தமிழின விடுதலைப் போராட்டத்திற்கான நடவடிக்கை துரிதப்படுத்துமாறு கூட்டணித் தலைமைப் பீடத்தைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானமும் நிறைவேறியது.

### கட்டுப்பாடு வேண்டும்

கீழ்க்காணும் தீர்மானங்களும் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன. எமக்குள் இருக்கும் கட்டுப்பாடற்ற தன்மையினால் பத்திரிகைகளில் நினைத்தபடி ஒவ்வொருவரும் அறிக்கை விடுவதைத் தவிர்க்க வேண்டும்.

சென்ற வாரம் வர்த்தக அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலி யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தபோது பலபேர் அறிக்கை விட்டதைப் பத்திரிகைகளில் காணக்கூடியதாக இருந்தது. இவ்வறிக்கைகளால் பொதுமக்கள் மனம் குழம்பி விடுதலை இயக்கமே பிளவுபட்டுவிட்டதோ என்றகேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

பொறுப்பற்ற அறிக்கைகளையும் செய்திகளையும் நடவடிக்கைக்குழு தீர்மானிக்காத எந்த செய்திகளையும் பத்திரிகைகளுக்குக் கொடுப்பதைத் தவிர்க்க வேண்டும்.

21-12-77ல் கொழும்பு பத்திரிகையொன்றில் வெளிவந்த திரு. வாசுதேவ நாணயக்காரவின் அறிக்கைபற்றி இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது. எங்கள் மத்தியில் எந்தப் பிளவும் ஏற்படாமல் யாருடைய தலையீடும் குறுக்கிடாமல் விடுதலை உணர்ச்சியை சிதைக்காதவண்ணம் தலைவர்கள் எம்இனத்தை வழிநடத்திச் செல்லவேண்டும்.

### கனகருக்கு சவால்

தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில போட்டியிட்டு பொத்துவில் எம். பி. யாக தெரிவுசெய்யப்பட்ட திரு க. கனகரத்தினம் தமது தேசிய அரசுப்பேரவை உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு மீண்டும் போட்டியிடுமாறு மகளிர்பேரவை பகிரங்க சவால்விடுக்கிறது.

பொத்துவில் எம். பி. திரு கனகரத்தினம் மீது, தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென, கூட்டணி நடவடிக்கை குழுவை மகளிர்பேரவை கேட்டுக்கொள்கிறது.

தமிழாராய்ச்சி மாநாடு நினைவுதினமான 78 ஜனவரி 10ம் தேதி நடைபெறும் நினைவுதினவிழாவில் பங்கு கொள்வதென்றும், கூட்டணி தலைமை அலுவலகத்தில் இருந்து ஊர்வலமாக நினைவுச் சின்னம் அமைந்துள்ள மைதானத்திற்கு சென்று மலர்தூவி அஞ்சலி செலுத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது

தமிழ் மகளிர் பேரவை பொதுச்சபைக் கூட்டத்தை தைப்பொங்கல் கழிந்தபின்னர் நடத்துவதென்றும் இப்பொதுச்சபை கூட்டத்தில், உத்தியோகத்தர்கள் தெரிவை நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

எதிர்காலத்தில் தீவிரமாக இயங்கும் நோக்கமாக மகளிர் பேரவை அமைப்பை பலப்படுத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது. [ஸ]

### சிங்களத்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தொழிலாளரைக் காட்டிக் கொடுத்ததுபோல், இன்று யூ என். பிக்கு. திரு. ருகண விஜயவீரா ஆதரவளித்து தொழிலாளரைக் காட்டிக் கொடுத்துவருகிறார்.

உலக வங்கியின் ஆலோசனையுடன் இந்த அரசு மக்களின் அரிசிக் கூப்பனைப் பறிக்கும் நடவடிக்கைக்கு எதிராக, நாடு முழுவதுமே கொதித்தெழப் போகிறது.

சீனாவில் மக்கள் புரட்சி ஏற்பட்டபோது சியாங்கேசேக், போர்மோசாவிற்குச் சென்று தஞ்சமடைந்ததுபோல், இந்நாட்டில் மக்கள் புரட்சி ஏற்படும்போது, வடக்கிலுள்ள கூட்டணியினர் கச்சதீவுக்குச் செல்லும் நிலை ஏற்படும்.

திரு. இக்பால் பேசும்போது, பிரதமர் திரு. ஜெயவர்த்தன, பெப்ரவரி 4ம் தேதி ஜனாதிபதியாகப் பதவி ஏற்றபின், மக்களிடமிருந்து தலைவரி அறவிடுவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதாகக் கூறினார்.

திரு. செந்திவேல் பேசுகையில், தொழிலாளரின் ஒன்றுபட்ட போராட்டத்தின்மூலம் தொழிலாளர் ஆட்சியை ஏற்படுத்தலாம் என்றார். [க-அ]

### தென்னம்பிள்ளை விநியோகம்

[நெல்லியடி]

கரவெட்டி திருஇருதயக் கல்லூரியில் கல்விபயிலும் மாணவர்களுக்கு பாடசாலை அதிபர் திரு. தோமஸ் ஈப்பன் சிறந்த இன தென்னம்பிள்ளைகளை வழங்கினார்.

இத்தென்னம்பிள்ளைகள் பிலிப்பைன்ஸ் நாட்டினத்தோடு நம் நாட்டினத்தைக் கலந்த ஒரு கலப்பினப் பிள்ளையாகும்.

பாடசாலையைப் போன்றே கட்டைவேலி ப. நோ. கூ. சங்கமும் பாவனையாளர்களுக்கு 2000 தென்னம்பிள்ளைகளை விநியோகித்துவருகின்றது. (க)

### சார்லி..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

1975ம் ஆண்டு பிரிட்டிஷ் மகாராணி இவருக்கு 'நைட்' பட்டம் வழங்கி கௌரவித்தார்.

சாமான்யமனிதனின் இயலாமையை நகைச்சுவையாக சித்தரித்துக்காட்டும் நடிப்பில் அவர் சிறப்புற்று விளங்கினார்.

# "தாய் பலவீனம் அடைவது ஏன்?"

## குடும்பநலத் திட்ட கருத்தரங்கில் பேச்சு

[திருநெல்வேலி]

"ஒரு தாய் இரு தொழிற்சாலைகளுக்குச் சமமானவள் பிள்ளைகளை உற்பத்தி செய்பவளாகவும் பிள்ளைப் பராமரிப்பு, கணவனின் பணிவிடைசெய்தல் மற்றும் வீட்டுக் கடமைகள் எனபவையும் அத்தாயின் பொறுப்புகளே. இதனால் அவள் பலவீனமடைய நேரிடுகிறது" இலங்கையில் நாளொன்றுக்கு 1050 பிள்ளைகள் பிறக்கின்றன.

இவ்வாறு குடும்ப நலத்திட்ட அதிகாரி திரு. என். புஷ்பநாயகம் கூறினார்.

குடும்பத்திட்டச் சங்கத்தின் இளைஞர் குடிசனக் குழுயாழ். இளைஞர்களுக்காக நடத்திய மூன்று நாள் கருத்தரங்கில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இக்கருத்தரங்கு பலாலி ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையில் நடைபெற்றது. காலை முதல் மாலை வரை குடும்பத் திட்டம் பற்றிய சொற் பொழிவுகளை விரிவுரையாளர்கள் நிகழ்த்தினர்

திரைப்படக்காட்சி; குடும்ப நல நாடகம் முதலான நிகழ்ச்சிகளும் இடம்பெறறன.

### இன்று நாடு திரும்புகிறார்

[யாழ்ப்பாணம்]

காரைநகர் மணிவாசகர் சபையின் ஆதரவில் நடைபெற்ற மணிவாசகர் விழாவில் விசேஷ விருந்தினராகக் கலந்துகொண்ட அண்ணமலைப் பல்கலைகழகப் பேருரையாளர் திரு. கு. சுந்தரமூர்த்தி இன்று நாடு திரும்புகிறார். [செ]

### பாறைகளுக்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எடுத்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாகப் பொலிஸாருக்குப் பொதுமக்கள் அளித்துள்ள ஒத்துழைப்பைப் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் பாராட்டினார்.

கான்ஸ்டபிளின் மரணம் சம்பந்தமாகத் தேடப்படும் மூன்று நபர்களைப் பற்றிய முழுத் தகவலும் பொலிசாருக்குக் கிடைத்துள்ளது. இவர்கள் விரைவில் பொலிஸ் வலையில் சிக்குவார்கள் என்று பொலிசார் நம்புகிறார்கள்.

### மரண அறிவித்தல்

#### இரத்தினம் ஆனந்தராசா

இரத்தினம் ஆனந்தராசா காலமாகிவிட்டார். இவர் இளைப்பாறிய தலங்கிளப்பைச் சேர்ந்த வே. இரத்தினம் ஆசிரியரின் புதல்வரும், தனராணி, ஜெயராசா ஆகியவர்களின் சகோதரரும் அருளம்பலம் ஆசிரியரின் மைத்துனரும் நடராசாவின் பெருமகனுமாவார். 26-12-77ல் இறுதிக்கிரியைகள் நடைபெறும்.

தகவல்: நண்பர்கள். 8015

பைண்டர்ஸ்

(புத்தகம் கட்டுபவர்)

தேவை

நேரில் வரவும்

கலாநிலையப் பதிப்பகம்

303, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

8013

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 26-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The EelanaaduPost Box No. 49, Jaffna. Telegram Eelanaadu. Telephone 389. Registered as a Newspaper in Sri Lanka.